பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
24 01 2026 12 40
சனிக்கிழமை நண்பகல்

ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இளையோர் மேம்பாட்டில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான பயணத்தில் இளையோர் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

3. தமிழக சட்டப்பேரவை கூட்டத் தொடர் மறுதேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

4. ஈரான் அரசுக்கு எதிராக நடைபெற்ற போராட்டத்தின் போது ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு ஐநா மனித உரிமை ஆணையம் கண்டனம் தெரிவித்துள்ளது.

5. 19 வயதிற்குட்பட்டோருக்கான உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா – நியூசிலாந்து இடையேயான ஆட்டம் இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

இளையோர் மேம்பாட்டில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மத்திய அரசு பணியிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 61 ஆயிரம் பேருக்கான நியமன ஆணைகளை காணொலி வாயிலாக வழங்கி அவர் பேசினார்.

இளையோரை அதிகமாக கொண்ட நாடாக இந்தியா திகழ்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

இதனை கருத்தில் கொண்டு இளையோருக்கு புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தி தரும் வகையில் பல்வேறு நாடுகளுடன் இந்தியா தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மத்திய அரசு மேற்கொண்டு வரும் சீர்திருத்த நடவடிக்கைகள் தொடரும் என்றும் அவர் கூறினார்.

இதன் காரணமாக மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுவதோடு வர்த்தகமும் அதிகரிக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

இன்று பணிநியமன ஆணைகளை பெற்றுள்ள இளையோர் நாட்டின் வளர்ச்சிக்காக பங்களிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளையோரின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் பிரதமர் தெரிவித்தார்.

உற்பத்தி மற்றும் ஏற்றுமதி துறையில் பல்வேறு சாதனைகள் படைக்கப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

மின்னணு பொருட்களின் உற்பத்தி 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆறு மடங்கு அதிகரித்து 11 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு உள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதன் ஏற்றுமதியும் 4 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு அதிகரித்துள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

வாகன உற்பத்தித் துறையில் இந்தியா முன்னணியில் உள்ளதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங்,

இதில் 49 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணியிடங்கள் உள்துறை அமைச்சகம் மற்றும் துணை ராணுவப்படையினருக்கானது என்று தெரிவித்தார்.

இதில் அதிக எண்ணிக்கையில் பெண்கள் நியமன ஆணைகளை பெற்றுள்ளதாக அவர் கூறினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக பாதுகாப்புப் படையில் மகளிர் பங்கு அதிகரித்து வருவதாகவும் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

நாடுமுழுவதும் 45 இடங்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் மத்திய அமைச்சர்கள் பங்கேற்று பணிநியமன ஆணைகளை வழங்கினர்.

*சென்னையை அடுத்த ஆவடியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் பங்கேற்று பணிநியமன ஆணைகளை வழங்கி பேசினார்.*

*(சவுண்ட் பைட் – முருகன் – 54 செகண்ட்ஸ்)*

*>>><><><><><<<*

*செமி கண்டக்டர் துறையின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.*

*அரசுமுறைப் பயணமாக நெதர்லாந்து சென்றுள்ள அவர், அந்நாட்டில் செயல்படும் செமி கண்டக்டர் உற்பத்திப் பிரிவை பார்வையிட்டு, அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.*

*செமி கண்டக்டர் துறையின் முன்னணி நிறுவனங்கள், இந்தியாவில் முதலீடு செய்ய ஆர்வம் காட்டுவதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.*

*>>><><><><><<<*

*திரிபுராவின் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று மத்திய அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.*

*அம்மாநிலத்தில் 365 கோடி ரூபாய் மதிப்பிலான எட்டு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, அவர் பேசினார்.*

*திரிபுராவின் நீடித்த வளர்ச்சிக்கு இந்த திட்டங்கள் உதவிடும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.*

*>>><><><><><<<*

*தமிழகத்தில் ஆயிரத்து 88 கோடி ரூபாய் செலவில் கிராம சாலைகள் மேம்படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் அறிவித்துள்ளார்.*

*இன்று சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பதிலளித்து அவர் பேசினார்.*

*சமூக பாதுகாப்பு திட்டத்தின்கீழ் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த 80 ஆயிரம் பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.*

சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் கிராம ஊராட்சி செயலாளர்களின் ஓய்வூதியம் இரண்டாயிரம் ரூபாயிலிருந்து 3 ஆயிரத்து 400 ரூபாயாக உயர்த்தப்படும் என்பன உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளையும் முதலமைச்சர் வெளியிட்டார்.

இதன்பின்னர் சட்டப்பேரவை கூட்டத் தொடர் மறுதேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

>>><><><><<<

நாட்டின் வளர்ச்சியில் உத்தரபிரதேசம் முக்கியப் பங்கு வகிப்பதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

உத்தரபிரதேச தினத்தை ஒட்டி சமூகவலைளத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

உத்தரபிரதேசம் வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து பயணிக்கும் என்றும் குடியரசுத்தலைவர் கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் மத்திய அமைச்சர்கள் பலரும் வாழ்த்துச் செய்தி விடுத்துள்ளனர்.

>>><><><><<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமரின் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது.

இது, இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

>>><><><><<<

தேசிய பெண் குழந்தைகள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நாளையொட்டி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள செய்தியில், ராணி வேலு நாச்சியார், ராணி லட்சுமி பாய் உள்ளிட்டோர் பெண் குழந்தைகளுக்கு உந்து சக்தியாக திகழ்வதாக குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் வளர்ச்சியில் பெண்கள் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் அவர் அதில் கூறியுள்ளார்.

மகளிர் தலைமையிலான மேம்பாட்டிற்கு மத்திய அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

>>><><><><<<

ஜார்க்கண்டில் நக்ஸலைட்டுகளுக்கு எதிராக பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 17ஆக அதிகரித்துள்ளது.

மேற்கு Singhbhum மாவட்டத்திற்கு உட்பட்ட Saranda வனப்பகுதியில் பாதுகாப்புப் படையினருக்கும், நக்ஸலைட்டுகளுக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்று வருகிறது.

இதில், இதுவரை 17 நக்ஸலைட்டுகள் கொல்லப்பட்டுள்ளதாக பாதுகாப்புப் படையினர் தெரிவித்தனர்.

நக்ஸலைட்டு அமைப்பைச் சேர்ந்த முக்கிய தலைவர்கள் சுற்றி வளைக்கப்பட்டிருப்பதாகவும் அவர்கள் கூறினர்.

>>><><><><<<

ஒடிசாவில் உள்ள Nabrangbur மாவட்டம் நக்ஸலைட் பிரச்சினைகளில் இருந்து முற்றிலும் விடுவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தை சேர்ந்த 9 நக்ஸலைட்டுகள் சத்தீஷ்கரில் சரணடைந்ததை அடுத்து இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

>>><><><><<<

மணிப்பூரில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது ஏராளமான ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

*Chanung* வனச் சரகத்திற்கு உட்பட்ட பகுதியில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த போது ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>><><><><<<

உத்தரப்பிரதேசத்தில் நேரிட்ட சாலைவிபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

*Unnao* மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் அதிவிரைவாக சென்ற இருசக்கர வாகனம் நிலை தடுமாறி சாலையோரத்தில் இருந்த விளம்பர பலகையில் மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>><><><><<<

ஈரானில் அரசுக்கு எதிராக நடைபெற்ற போராட்டத்தை ஒடுக்குவதற்காக மேற்கொண்ட நடவடிக்கையின் போது ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு ஐ.நா மனித உரிமை ஆணையம் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஜெனீவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் அவசர அமர்வு கூட்டத்தில், ஈரானின் செயலுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

அந்நாட்டில் பாதுகாப்புப் படையினர் ஏராளமானோரை கைது செய்திருப்பதும் தவறானது என்று அக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

>>><><><><<<

அமெரிக்காவில், குடும்பத் தகராறு காரணமாக நேரிட்ட துப்பாக்கிச் சம்பவத்தில் இந்தியாவைச் சேர்ந்த ஒருவர் உட்பட 4 பேர் உயிரிழந்தனர்.

ஜார்ஜியா மாகாணத்திற்கு உட்பட்ட அட்லாண்டாவில் நேரிட்ட இந்த சம்பவத்தில் தொடர்புடைய ஒருவர் கைது செய்யப்பட்டிருப்பதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

*>>><><><><><<<*

*விளையாட்டுச் செய்திகள்*

*19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில், இந்தியா இன்று நியூஸிலாந்தை எதிர்கொள்கிறது.*

*Bulawayo-வில் நடைபெறவுள்ள இப்போட்டி சற்றுநேரத்தில் தொடங்குகிறது.*

*-----------------*

*தோஹா சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.*

*15 வயதிற்குட்பட்டோருக்கான மகளிர் ஒற்றையர் பிரிவில், Sreejani Chakraborty தங்கப்பதக்கத்தையும், Ahona Roy வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.*

*15 வயதிற்குட்பட்டோருக்கான கலப்பு இரட்டையர் பிரிவில், Aditya Dass - Ankolika Chakraborty இணையும், Pradhivadhi - Divyanshi Bhowmick இணையும் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளன*